
**பிப்ரவரி – 07**

# TNPSC துளிகள்

- கோடக் மஹிந்திரா சொத்து மேலாண்மை நிறுவனம் ஆனது, MSCI (Morgan Stanley Capital International) இந்தியக் குறியீட்டைக் கண்காணிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட கோடக் MSCI இந்தியா ETF எனப்படுகின்ற நாட்டின் முதல் பரிமாற்ற-வர்த்தக நிதியினை (ETF) அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஐதராபாத்தின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தில் உள்ள பாதுகாப்புசார் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தொழில்துறை-கல்வித்துறை சார் சிறப்பு மையம் (DIA-CoE) ஆனது முப்பரிமாண அச்சிடல் முறையிலான பெரிய மாதிரிகளின் உற்பத்தி (LAAM) அமைப்பின் பயன்பாட்டுச் செயல்விளக்கத்தினை மேற்கொண்டது.
- குஜராத் மாநிலத்தில் உள்ள ஆனந்த் ஊரக மேலாண்மை கல்வி நிறுவனத்தில் (IRMA) இந்தியாவின் முதல் தேசியக் கூட்டுறவுப் பல்கலைக்கழகமான திரிபுவன் சஹ்காரி பல்கலைக் கழகம் ஆனது நிறுவப்பட உள்ளது.
- இணையவழி மூலம் திரட்டப்படும் தொழிலாளர்கள் (GIG) ஆயுஷ்மான் பாரத்-பிரதான் மந்திரி ஜன் ஆரோக்ய யோஜனா (PMJAY) திட்டத்தின் கீழ் சுகாதார நல வசதிகளைப் பெற தகுதியுடையவர்கள் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் 3,000 மில்லியன் டன் (மெட்ரிக் டன்) சரக்குகளை ரயில் மூலம் கொண்டு செல்வதை மத்திய அரசு இலக்காகக் கொண்டுள்ளது.
- ஐதராபாத்தில் உள்ள இந்தியத் தேசியப் பெருங்கடல் தகவல் சேவை மையம் (INCOIS) ஆனது நிறுவனப் பிரிவில் 2025 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க சுபாஷ் சந்திரபோஸ் பேரிடர் மேலாண்மை விருதைப் பெற்றுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## DRIP II திட்டத்தின் கீழ் அணை புனரமைப்பு – தமிழ்நாடு




- இந்த மாநிலத்தில் உள்ள 50 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான ஐந்து பெரிய அணைகள், உலக வங்கியின் உதவியுடன் இரண்டாவது அணை புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் (DRIP) கீழ் விரைவில் புனரமைக்கப்பட உள்ளன.

- அணைப் பாதுகாப்பை உறுதி செய்வதையும் கட்டமைப்புகளின் செயல்பாட்டை மிக மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்ட இத்திட்டங்கள் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன.
- இதன்படி விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ஆனைகுட்டம் அணை, திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள மிருகந்தாநதி அணை மற்றும் அமராவதி அணை ஆகியவற்றில் புதுப்பித்தல் பணிகளைத் தொடங்குவதற்கு உலக வங்கியின் ஒப்புதலுக்காக இந்தத் துறை காத்திருக்கிறது.
- இது வில்லிங்டனில் (கடலூர் மாவட்டம்) அணை புனரமைப்பு திட்டம் மற்றும் மேட்டூர் அணையில் நீர்ப்பிடிப்புப் பகுதி சுத்திகரிப்புப் பணிகளுக்கான திட்டங்களுக்கான முன்மொழிவினையும் உருவாக்கி வருகிறது.
- கெலவரப்பள்ளி மற்றும் நீரார் மேல்மட்ட அணை ஆகிய இரண்டு அணைகள் இதில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.
- 1959 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட வைகை அணையானது, இராமநாதபுரம் மற்றும் மதுரை உள்ளிட்ட மாவட்டங்களின் குடியிருப்பாளர்களுக்கு பயனளித்தது.
- பவானிசாகர் அணை பவானி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

## பழைய ஓய்வூதியத் திட்டம் தொடர்பான குழு – தமிழ்நாடு

| Parameter | Old Pension Scheme (OPS) | National Pension Scheme (NPS) | Unified Pension Scheme (UPS) |
|---|---|---|---|
| Pension Amount | 50% of the last basic pay, increases with DA | 10% salary contribution, 14% government contribution, market dependent pension | Pension amount is 50% of the average basic pay of the last 12 months |
| Family Pension | Family gets the entire pension | Depends on corpus and annuity | Family gets 60% of the employee's pension |
| Contribution | No cut in salary, 100% government contribution | Employee 10% and government 14% contribution | Employee 10% and government 18.5% contribution |
| Compliance | Government employees before 2004 | All government employees after 1 January 2004 | All government employees having 10-25 years of service |
| Additional benefits | Gratuity up to Rs. 20 lakh on retirement | No fixed additional benefit | Gratuity + 1/10th of salary paid for every six months of service |

- தமிழக அரசானது, பழைய ஓய்வூதியத் திட்டம், பங்களிப்பு சார் ஓய்வூதியத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றை ஆய்வு செய்வதற்காக மூன்று பேர் கொண்ட குழுவினை அமைத்துள்ளது.
- இந்திய ஆட்சிப் பணி அதிகாரி ககன்தீப் சிங் பேடி, சென்னை பொருளியல் கல்வி நிறுவனத்தின் முன்னாள் இயக்குனர் K.R. சண்முகம் ஆகியோர் இந்தக் குழுவின் சில உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- இக்குழுவானது ஒன்பது மாதங்களுக்குள் பரிந்துரைகளுடன் கூடிய மிகவும் விரிவான அறிக்கையை சமர்ப்பிக்கும்.
- 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் தேதியன்று அரசுப் பணியில் சேர்ந்த மாநில அரசு ஊழியர்களுக்குப் பங்களிப்பு சார் ஓய்வூதியத் திட்டம் (CPS) அறிமுகப்படுத்தப்பட்டது.

- 2004 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதி முதல் மத்திய அரசு ஊழியர்களுக்கு தேசிய ஓய்வூதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- இருப்பினும், மாநில அரசு ஊழியர்களுக்கு CPS முறையே பின்பற்றப்பட்டது.
- இந்த ஆண்டு ஜனவரி 24 ஆம் தேதியன்று மத்திய அரசு ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

## NABARD வங்கியின் மாநில நிதிப்புழக்கத் திறன் பகுப்பாய்வு அறிக்கை 2025-26

- தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் (NABARD) மாநில நிதிப் புழக்க (கடன்) திறன் பகுப்பாய்வு அறிக்கை 2025-26 ஆனது, தமிழ்நாடு மாநில நிதிக் கருத்தரங்கில் வெளியிடப்பட்டது.
- NABARD வங்கியானது 2025-26 ஆம் ஆண்டிற்காக மாவட்ட வாரியாக மிக சாத்தியமான இணைக்கப்பட்ட கடன் திட்டங்களைத் தயாரித்து, தொகுத்து, மாநில நிதிப் புழக்கத் திறன் பகுப்பாய்வு அறிக்கையாக வெளியிட்டுள்ளது.
- கடந்தப் பத்தாண்டுகளில் சுமார் 11 முதல் 12 சதவீத கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்துடன் தமிழ்நாடு தொடர்ந்து மிக வலுவான மீள்தன்மையை வெளிப்படுத்தி வருகிறது.
- 2025-26 ஆம் ஆண்டிற்கு, வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய பல்வேறு நடவடிக்கைகளுக்காக சுமார் 4,34,583 கோடி ரூபாய் ஒதுக்கீட்டுடன், முன்னுரிமைத் துறைக்கான கடன் வழங்கீட்டுத் திறன் சுமார் 10 லட்சம் கோடி ரூபாய் ஆகிய இருக்கும் என்று NABARD கணித்துள்ளது.




# தேசியச் செய்திகள்

## SC/ST சட்டம் - அறிவுசார் சொத்து

- 1989 ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்ட சாதியினர்/ பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (வன் கொடுமைகள் தடுப்பு) சட்டம் மற்றும் அதன் 1995 ஆம் ஆண்டு விதிகளின் கீழ் அறிவு சார் சொத்து இழப்பு இழப்பீடு குறித்த மும்பை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது.
- 1995 ஆம் ஆண்டு விதிகளின் 12(1)வது விதியினை உள்ளடக்கிய, வன்கொடுமைச் சட்டத்தின் 15Aவது பிரிவின் (11)(d) உட்பிரிவின் கீழ், சேதப்படுத்தப் படும் சொத்துக்கள் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய ஒரு இழப்பீட்டை மிகவும் நியாயமான முறையில்

மதிப்பிடக் கோரி மனுதாரர்கள் மும்பை உயர் நீதிமன்றத்தினை அணுகினர்.

❖ "சொத்து" என்ற சொல் ஆனது, தரவு, மின்னணுப் பொருட்கள் மற்றும் அறிவுசார் உரிமைகள், அவை புலனாகும் அல்லது புலனாகாதச் சொத்துக்கள் என்ற வகையில், அறிவுசார் சொத்துக்களையும் உள்ளடக்கியதாக மிகவும் பரந்த அளவில் விளக்கப்பட வேண்டும் என்று மும்பை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

❖ இதன்படி காப்புரிமைகள், பதிப்புரிமைகள் மற்றும் வடிவமைப்புகள் ஆகியன அமைப்பு ரீதியாக இல்லாவிட்டாலும், அவையும் சொத்துகளே ஆகும். என்பதோடு 1989 ஆம் ஆண்டு SC/ST சட்டத்தின் கீழ் இழப்பீட்டிற்கு மதிப்பிடப்படக் கூடியவை.

❖ மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், இச்சட்டத்தின் 8வது பிரிவானது, குற்றம் சாட்டப் பட்டவர்களே தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபிக்கும் முக்கியப் பொறுப்பை இடமாற்றுகின்ற வகையில் தலைகீழ் நிரூபண/ ஆதார சமர்ப்பிப்புப் பொறுப்பினை கொண்டுள்ளது.




## GARBH-INi-Drishti



❖ சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் மற்றும் ஃபரிதாபாத்தில் உள்ள மருத்துவத் தகவல் பரிமாற்றம் சார்ந்த சுகாதார அறிவியல் மற்றும் தொழில் நுட்ப நிறுவனம் ஆகியவை கர்பிணி-GA2 என்ற இந்தியாவிற்கான மிகவும் பிரத்தியேக செயற்கை நுண்ணறிவு மாதிரியை உருவாக்குவதற்காக ஒரு ஒத்துழைப்பினை மேற் கொண்டுள்ளன.


❖ இது தெற்காசியாவின் மிகப்பெரிய ஆய்விற்கான கர்ப்பிணிகள் குழு தரவுத்

தொகுப்புகளில் ஒன்றின் விரிவான கண்ணோட்டத்தை வழங்கும் தரவு முகப்பு ஆகும்.

- GARBH-Ini GA-2 ஆனது மரபணு படிமுறைகளை அடிப்படையாகக் கொண்டது.
- இந்த மரபணுப் படிமுறையானது பெரும் பரிணாமம் மற்றும் இயற்கைத் தேர்வுக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட ஒரு மேம்பாட்டு/சாதகமாக்க நுட்பமாகும்.
- இந்த முன்னெடுப்பானது, மகப்பேறுக்கு முந்தையப் பராமரிப்பில் துல்லியத்திற்கான முக்கியமான தேவையை நிவர்த்தி செய்கின்ற GARBH-Ini திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## பனாமா மற்றும் BRI முன்னெடுப்பு





- சீனாவின் மண்டலம் மற்றும் சாலை முன்னெடுப்பில் (BRI) இருந்து விலகுவதாக பனாமா அதிபர் அறிவித்துள்ளார்.
- இந்த மண்டலம் மற்றும் சாலை முன்னெடுப்பானது 2013 ஆம் ஆண்டில் சீனாவால் தொடங்கப் பட்டது.
- பல்வேறு நாடுகளில் மேற்கொள்ளப்படும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்குப் பெரும் நிதி அளிப்பதன் மூலம் பெய்ஜிங் தனது உலகளாவியப் பொருளாதாரச் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான ஒரு முக்கிய வழிமுறையாக இது செயல்பட்டது.
- முன்னாள் அதிபர் ஜுவான் கார்லோஸ் வரேலாவின் ஆட்சியின் போது 2017 ஆம் ஆண்டில் பனாமா இந்த முன்னெடுப்பில் இணைந்தது.
- பனாமா கால்வாய் எனபது, 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்காவினால் கட்டப்பட்டு, 1999 ஆம் ஆண்டில் பனாமாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சர்வதேச பெரும் பூனை இனங்கள் கூட்டணி 2025

- சர்வதேச பெரும் பூனை இனங்கள் கூட்டணி (IBCA) ஆனது அதிகாரப்பூர்வமாக ஓர் ஒப்பந்த அடிப்படையிலான மற்றும் அரசுகளுக்கிடையேயானப் பெரும் அமைப்பாக நடைமுறைக்கு வந்துள்ளது.
- இது ஜனவரி 23 ஆம் தேதியன்று முழுமையாகச் செயல்படும் சர்வதேசச் சட்டப்பூர்வ நிறுவனமாக மாறியது.

- இந்தக் கட்டமைப்பு ஒப்பந்தத்திற்கான ஒரு வைப்புச் சேவை அமைப்பாக வெளி விவகாரங்கள் துறை அமைச்சகம் (MEA) செயல்படும்.
- சமீபத்தில் நிகரகுவா குடியரசு, எஸ்வதினி பேரரசு, இந்தியக் குடியரசு, சோமாலியா கூட்டாட்சி குடியரசு மற்றும் லைபீரியா குடியரசு ஆகிய ஐந்து நாடுகள் தங்கள் ஒப்புதல் ஆவணங்களை இதில் சமர்ப்பித்துள்ளதையடுத்து அவை IBCA கூட்டணியின் ஸ்தாபன உறுப்பினர்களாக மாற்றியுள்ளன.
- IBCA ஆனது 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 09 ஆம் தேதியன்று இந்தியப் புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் 50வது ஆண்டு நிறைவை நினைவு கூரும் ஒரு நிகழ்வின் போது இந்திய அரசினால் தொடங்கப்பட்டது.
- இந்த முன்னெடுப்பின் மிகவும் முக்கிய நோக்கமானது புலி, சிங்கம், சிறுத்தை, பனிச் சிறுத்தை, சிவிங்கிப் புலி, ஜாகுவார் மற்றும் பூமா ஆகிய ஏழு முக்கியப் பெரும் பூனை இனங்களைப் பாதுகாப்பதாகும்.
- தற்போது வரையில், இந்தியா உட்பட 27 நாடுகள் இந்தக் கூட்டணியில் சேர ஒப்புக் கொண்டுள்ளன.




## துரும்பன் பூனை



- முதன்முறையாக, மேற்கு வங்காள மாநிலத்தின் புருலியா மாவட்டத்தின் காடுகளில் துரும்பன் பூனை சுற்றித் திரிவது கண்டறியப்பட்டுள்ளது.

- இது உலகின் மிகச்சிறிய மற்றும் இலகுவான எடை கொண்ட பூனையாகும்.
- துரும்பன் பூனையானது, இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டுமே காணப்படுகிறது, என்ற நிலையில் இது சமீபத்தில் நேபாளத்தின் காடுகளில் கண்டுபிடிக்கப்பட்டது.
- மொத்தப் பூனைகளில் 80 சதவீதம் இந்தியாவில் காணப்படுகிறது என்பதோடு நிலப் பயன்பாட்டு மாற்றத்தினால் அவற்றின் வாழ்விடத்தின் பெரும்பகுதி மிக அபாயத்தில் உள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகின் வலுவான முதல் 10 நாடுகள் – 2025

| S.No | Country | GDP | Population | Region |
|---|---|---|---|---|
| 1. | United States | $30.34 trillion | 34.5 crore | North America |
| 2. | China | $19.53 trillion | 141.9 crore | Asia |
| 3. | Russia | $2.2 trillion | 144.4 crore | Asia |
| 4. | United Kingdom | $3.73 trillion | 6.91 crore | Europe |
| 5. | Germany | $4.92 trillion | 8.45 crore | Europe |
| 6. | South Korea | $1.95 trillion | 5.17 crore | Asia |
| 7. | France | $3.28 trillion | 6.65 crore | Europe |
| 8. | Japan | $4.39 trillion | 12.37 crore | Asia |
| 9. | Saudi Arabia | $1.14 trillion | 3.39 crore | Asia |
| 10. | Israel | $550.91 billion | 93.8 lakh | Asia |

- ஃபோர்ப்ஸ் இதழானது, 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் மிகவும் வலுவான முதல் 10 நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- உலகளாவியத் தரவரிசையில் அமெரிக்கா முன்னணியில் உள்ள நிலையில் அதைத் தொடர்ந்து சீனா இரண்டாவது இடத்திலும், இஸ்ரேல் பத்தாவது இடத்திலும் உள்ளன.
- 2.2 டிரில்லியன் டாலர் மதிப்பிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் 84 மில்லியன் மக்கள்தொகை கொண்ட ரஷ்யா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இந்த ஆண்டின் பட்டியலில் 3.73 டிரில்லியன் டாலர் மதிப்பிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி கொண்ட ஐக்கியப் பேரரசு நான்காவது இடத்தில் உள்ளது..
- சுமார் 4.92 டிரில்லியன் டாலர் மதிப்பிலான பொருளாதாரம் கொண்ட ஜெர்மனி இந்தப் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் உள்ளது.
- உலகின் வலுவான நாடுகளில் 3.55 டிரில்லியன் டாலர் மதிப்பிலான மொத்த உள்நாட்டு

உற்பத்தி மற்றும் 1.43 பில்லியன் மக்கள் தொகையுடன் இந்தியா இதில் 12வது இடத்தில் உள்ளது.

# மாநிலச் செய்திகள்

## இராஜஸ்தான் மதமாற்ற எதிர்ப்பு மசோதா 2025


- இராஜஸ்தான் சட்டமன்றம் வலுக்கட்டாயமாக, மோசடி அல்லது தூண்டுதலால் மேற் கொள்ளப் படும் மத மாற்றங்களைத் தடுப்பதற்காக் என ஒரு மசோதாவை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இதற்கு 2025 ஆம் ஆண்டு சட்டவிரோத மதமாற்றத் தடை மசோதா எனப் பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த மசோதாவானது, சட்டவிரோதமாக மதமாற்றத்தில் ஈடுபடுபவர்களுக்கு மிகவும் குறைந்த பட்சம் 15,000 ரூபாய் அபராதத்துடன் ஒன்று முதல் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படலாம் என்று இந்த மசோதா கூறுகிறது.
- 18 வயதிற்குட்பட்ட ஒருவர், ஒரு பெண் அல்லது பட்டியலிடப்பட்ட சாதியினர் அல்லது பட்டியலிடப் பட்ட பழங்குடியினரை (SC/ST) இலக்காக வைத்து சட்டவிரோதமாக மத மாற்றம் செய்தால், இரண்டு முதல் 10 ஆண்டுகள் வரையில் தண்டனை விதிக்கப்படும் மற்றும் 25,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.
- சட்ட விரோதமானக் கூட்டு மத மாற்றத்திற்கு, குறைந்தபட்சம் ஆக 50,000 ரூபாய் அபராதத்துடன் மூன்று முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப் படும்.




## தெலுங்கானா சாதிவாரிக் கணக்கெடுப்பு

- அம்மாநில அமைச்சரவையானது, இந்த சாதி வாரியான கணக்கெடுப்பிற்கு ஒப்புதல் அளித்து சமீபத்தில் மாநில சட்டமன்றத்தில் சமர்ப்பித்தது.
- மாநில மக்கள் தொகையில் முஸ்லிம் அல்லாத பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) 46.25 சதவீதம் பேர் உள்ளனர்.

- மாநில மக்கள் தொகையில் முஸ்லிம் OBC பிரிவினர் 10.08 சதவீதம் பேர் உள்ள நிலையில் பட்டியலிடப் பட்ட சாதியினர் 17.43 சதவீதம் பேர் மற்றும் பட்டியலிடப் பட்ட பழங்குடியினர் 10.45 சதவீதம் பேர் ஆவர்.
- முஸ்லிம் அல்லாத பொது சாதியினர் (பிற சாதியினர்) 13.31 சதவீதம் பேர் ஆவர்.
- முஸ்லிம் அல்லாத பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் இந்துக்கள் மட்டுமல்லாமல் தங்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தாலும் கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள் மற்றும் பௌத்தர்களும் இதில் அடங்குவர்.
- மொத்தம் 12.56 சதவீத முஸ்லிம்களில், 2.48 சதவீதம் பேர் மட்டுமே OBC அந்தஸ்தைப் பெற மாட்டார்கள்.
- பீகார் மாநிலமானது தனது சொந்த சாதிவாரிக் கணக்கெடுப்பை மேற்கொண்ட முதல் மாநில அரசாகும்.
- அந்த மாநில மக்கள் தொகையில் 63.14 சதவீதம் பேர் OBC பிரிவினர் என்று இந்தக் கணக்கெடுப்பு காட்டுகிறது.
- இந்தத் தரவுகளின் அடிப்படையில், பீகார் மாநில அரசானது அம்மாநிலத்தின் OBC இட ஒதுக்கீட்டை அதிகரிக்க முயன்றது, ஆனால் பாட்னா உயர் நீதிமன்றமானது அதை "அரசியலமைப்புக்கு முரணானது" என்று நிராகரித்தது.




## பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

### திருமதி உலக அழகிப் பட்டம் 2025

- தென்னாப்பிரிக்காவின் ட்ஷேகோ கேலே 2025 ஆம் ஆண்டு திருமதிகளுக்கான உலக அழகிப் போட்டியில் பட்டம் வென்றார்.
- இந்தப் போட்டியின் 40 ஆண்டுகால வரலாற்றில் இந்தப் பட்டத்தினை வென்ற முதல் கறுப்பினப் பெண்மணி என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- இலங்கையிலிருந்து பங்கேற்ற இஷாதி அமண்டா, இந்தப் போட்டியில் இரண்டாம்

இடத்தைப் பிடித்தார்.


- தாய்லாந்தைச் சேர்ந்த போட்டியாளர், இந்தப் போட்டியில் மூன்றாம் இடத்தினைப் பெற்றார்.




# இதரச் செய்திகள்

## பாரத் புற்றுநோய் மரபணு தரவுத் தொகுப்பு

- இந்தியாவில் புற்றுநோய் ஆராய்ச்சியை முற்றிலும் மாற்றியமைப்பதற்காக வேண்டி அதன் முதல் வகையிலான புற்றுநோய் மரபணு தரவுத்தளமான பாரத் புற்றுநோய் மரபணு தரவுத்தொகுப்பினை (BCGA) சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகமானது அறிமுகப்படுத்தியுள்ளது.
- 480 மார்பகப் புற்றுநோய்ப் பாதிப்புள்ள நோயாளிகளிடமிருந்து சேகரிக்கப்பட்ட திசு மாதிரிகளிலிருந்து இது வரை மேற்கொள்ளப்பட்ட 960 முழு எக்ஸோம் (மரபணுவின் முழுமையான குறியீட்டுப் பகுதி) வரிசை முறை பற்றிய தரவு இதில் உள்ளது.
- இந்தியாவில் புற்றுநோய் சார்ந்த உயிரிக் குறிப்பான்களை அடையாளம் காண இந்த தரவுத் தளம் ஒரு விலைமதிப்பற்ற வளமாக இருக்கும் என்பதோடு இது மார்பகப் புற்று நோய்களை முன்கூட்டியே கண்டறிவதற்கு உதவும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★